
# சாரா நீதிமன்றத்திற்குச் செல்கிறாள்



தங்களின் கதையைச் சொல்ல உதவி தேவைப்படும் அனைவருக்கும்

உங்களின் குரல் எங்கள் அனைவருக்கும் முக்கியம்

இந்த வெளியீடு 4 அமைப்புகளின் ஒரு கூட்டு முயற்சியாகும்.


**State Courts**
1 Havelock Square
Singapore 059724
contact@statecourts.gov.sg
statecourts.gov.sg

**Hagar Singapore Ltd**
8 Lorong 27A Geylang
#03-04, Singapore 388106
singapore@hagarinternational.org
hagar.org.sg

**Community Justice Centre**
1 Havelock Square
Singapore 059724
help@cjc.org.sg
cjc.org.sg

**NUS Centre for Pro Bono & Clinical Legal Education**
NUS Faculty of Law
469A Bukit Timah Road
#07-01 Tower Block
Singapore 259770
probono@nus.edu.sg
law.nus.edu.sg/probono


சாரா நீதிமன்றத்திற்குச் செல்கிறாள்

Copyright © 2018 State Courts & Hagar Singapore Ltd

Adapted from Who Will Be in Court?  Originally produced by Hagar International in conjunction with UNICEF.
Modified for use in Singapore with drawings by Jolie Lim, colouring and digital layout by Wileen Saw.
KBBubblegum font used with the kind permission of Khrys Bosland of Fort Myers, Florida, USA.

All rights reserved.  Printed in Singapore.
These materials may be freely used.

For enquiries and further adaptation, contact any of the partner organisations involved in this project.
ISBN 978-981-11-8954-8

# சாரா நீதிமன்றத்திற்குச் செல்கிறாள்







போலீஸ்

சாராவுக்குப் பயங்கரமான ஏதோ ஒன்று நடந்துவிட்டது.

யாராவது குற்றம் செய்து விட்டார்களா என்று பார்ப்பதற்குப் போலீசார் அழைக்கப்பட்டனர்.


சாரா இப்போது நீதிமன்றத்திற்குச் சென்றுக் கொண்டிருக்கிறாள். என்ன நடந்தது என்பதை அவள் நீதிபதியிடம் சொல்லப்போகிறாள். உன்னைப் போலவே!






சாராவுக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது. ஏன் என்றால், அவள் இதற்கு முன் நீதிமன்றத்திற்குச் சென்றதே இல்லை. சாராவுக்கு எப்படி இருக்கும் என்று உனக்கு வரைந்து காட்ட முடியுமா?

ஆனால், அவளுக்கு உதவி செய்வதற்காக பல பேர் இருப்பார்கள் என்று சாராவிற்கு ஞாபகம் வந்தது. இவர்கள் சாராவைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்வார்கள்.



நீதிமன்றம் ஒரு பெரிய கட்டடம். அதில் பல அறைகள் இருக்கும். அந்த அறைகளில் ஓர் அறைக்குள் சாரா செல்வாள். அங்கு, நீதிபதியும் மற்றவர்களும் என்ன நடந்தது என்பதைப் பற்றி பேசுவார்கள்.





சாரா நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய நாளும் இறுதியாக வந்தது.

அவள் நீதிமன்றத்திற்கு வந்த போது, சிறிது நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அவளுக்குச் சற்று பதட்டமாக இருந்தது. ஆனால், சாராவுக்கு உதவி செய்து வந்த சமூக சேவை ஊழியர் அவளது பக்கத்தில் அமர்ந்திருந்ததால், அவளுக்குத் தைரியமாக இருந்தது.



சாரா கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் நேரம் வந்த போது, அவளை அழைத்துச் செல்ல ஒருவர் வந்தார்.

என்ன நடந்தது என்பதைப் பற்றி நீதிபதி, அரசு வழக்கறிஞர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டவரின் வழக்கறிஞர் ஆகிய அனைவரும் அவளிடம் கேள்விகள் கேட்பதற்காக சாரா நீதிமன்றத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டாள்.





குற்றம் சுமத்தப்பட்டவரைப்  பார்க்க சாரா சற்று பயந்தாள்.

ஆனால், அவள் பயப்படாமல் இருக்க சில வழிகள் உள்ளன.

அவள் பாதுகாப்பாக இருப்பதாகத் தோன்ற அவளுக்குப் பிடித்த விளையாட்டுப் பொருளை அவள் பிடித்துக்கொள்ளலாம்.



அவள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது சமூக சேவை ஊழியர் அவள் அருகில் அமர நீதிபதி அனுமதிக்கலாம்.





அல்லது, சாரா நீதிமன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கும் அறையிலிருந்து கேள்விகளுக்குப் பதில் அளிக்கலாம். இப்படிச் செய்தால், நீதிமன்றத்தில் இருக்கும் எல்லோரையும் அவள் தொலைகாட்சியின் வழி பார்க்கலாம்.



முதலில், நீதிபதி சாராவிடம் சில கேள்விகள் கேட்டார்.

அடுத்து, அரசு வழக்கறிஞர் சாராவிடம் கேள்விகள் கேட்டார்.


பிறகு, குற்றம் சுமத்தப்பட்டவரின்  வழக்கறிஞர் சாராவிடம் கேள்விகள் கேட்டார்.





“சாரா, உனக்கு என்ன வயது” போன்ற சில கேள்விகள் எளிதாக இருந்தன.

ஆனால், மற்ற கேள்விகள் கடினமாக இருந்தன. ஏன் என்றால், சிறிது காலத்திற்கு முன் நடந்ததைச் சாரா மீண்டும் நினைத்துப் பார்க்க  வேண்டியிருந்தது. இவற்றைப் பற்றி பேசுவது சாராவுக்குக் கவலையாக இருந்தது. ஆனால், நீதிபதிக்கு உண்மை தெரிவது முக்கியம் என்று சாராவுக்குத் தெரியும்.




அதனால், சாரா, எல்லா கேள்விகளுக்கும் உண்மையைக் கூறினாள். அவளுக்குக் கேள்வி புரியவில்லை என்றால், அவள் “எனக்குக் கேள்வி புரியவில்லை” என்று கூறினாள். அதன் பிறகு, சாராவுக்குப் புரியும்படி வேறு வழியில் கேள்வி கேட்கப்பட்டது.





ஒரு கேள்விக்குப் பதில் தெரியாவிட்டால், இப்படி தான் இருக்கும் என்று நினைத்து ஏதேனும் பதிலைக் கூறக்கூடாது என்று சாராவுக்குத் தெரியும். ஒரு கேள்வி அவளுக்குப் புரிந்தால் மட்டுமே அவள் பதிலளித்தாள்.



சாரா கேள்விகளுக்குப் பதில் அளித்துகொண்டிருந்த சமயம், அவளுக்குக் கழிவறைக்குப் போகும் அவசியம் வந்துவிட்டது!

கழிவறைக்குப் போக வேண்டும், வழக்கை நிறுத்த முடியுமா என்று சாரா நீதிபதியிடம் கேட்டாள். அதனால், சிறிது நேரம் வழக்கை நிறுத்தினார்கள்.





ஒரு சமயம், சாராவுக்குக் களைப்பாக இருந்தது. அவள் நீண்ட நேரமாக கேள்விகளுக்குப் பதில் அளித்துக் கொண்டிருந்தாள்! அதனால், களைப்பாக இருக்கிறது, ஓய்வு எடுக்கலாமா என்று நீதிபதியிடம் கேட்டாள். அதில் பிரச்சினை ஒன்றுமே இல்லை!

சாராவால் ஓய்வெடுக்க முடிந்தது.




அதன் பிறகு வழக்கு முடிந்துவிட்டது! கேள்விகளுக்கு உண்மையாக பதில் அளித்து சாரா மிகவும் முக்கியமான ஒரு வேலையை முடித்துவிட்டாள்.






எல்லா சாட்சிகள் கூறிய பதில்களையும் கேட்டப் பிறகு, நீதிமன்றத்தில் அவர் கேட்ட எல்லாவற்றையும் பற்றி நீதிபதி யோசிப்பார்.



சிறிது நேரம் யோசித்த பிறகு, குற்றம் சுமத்தப்பட்டவருக்கு என்ன நடக்க வேண்டும் என்பதைப் பற்றி நீதிபதி முடிவு செய்வார்.





அடுத்து என்ன நடக்கும் என்று சாராவுக்குத் தெரியாது. ஆனால், அவள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று பலர் விரும்புகிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும்!

உனக்கு மகிழ்ச்சி தருவது எது? அவற்றில் சிலவற்றை இங்கே வரைந்துகாட்டு.

# பராமரிப்பாளர்கள் மற்றும் சமூக சேவை ஊழியர்களுக்கான தகவல்.

இப்புத்தகம், குற்றவியல் நீதி செயல்முறையின் கீழ், குறிப்பாக, குற்றவியல் வழக்குகளில் சம்மந்தப்பட்டிருக்கும், எளிதில் பாதிக்கப்படக்கூடிய சாட்சிகளுடன் வேலை செய்யும் அனைவரையும் ஆதரிப்பதற்காக சிங்கப்பூரில் உள்ள நான்கு அமைப்புகளின் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்டதாகும்.

மேலும் ஏடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை அல்லது கூடுதல் ஏடுகளை (அவை கிடைக்கப் பெற்றவுடன்) பெற நீங்கள் விரும்பினால், இணை ஆதரவு அமைப்புகளின் இணையத் தளங்களைக் காணவும்.

# அங்கீகாரம்

மூல புத்தகத்தை Hagar International, UNICEF-வோடு இணைந்து தயாரித்தது. இப்புத்தகம், Hagar International-ன் அனுமதியோடு அம்மூலபுத்தகத்தின் பொருளடக்கத்தைத் தழுவி தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படைப்பு, மாணவர்களால் வழிநடத்தப்படும் நீதிக்கான அணுகலில் கவனம் செலுத்தும் NUS சட்டத்துறையின் குற்றவியல் நீதி சங்கம் உள்பட, பலருடைய கூட்டு முயற்சியாகும்.



இப்புத்தகத்தின் கதாபாத்திரங்கள் Jolie Lim என்ற ஒரு Pathlight பள்ளி மாணவியால் வரையப்பட்டன. அவள் கலகலப்பான, புத்திசாலியான, உற்சாகமான மற்றும் அதிக திறன் படைத்தவள். Jolie-ன் படைப்புகள் பல, பைகள், T-சட்டைகள், குறிப்பு புத்தகங்கள் மற்றும் இதர பலவகைப்பொருட்களாக உரு பெற்றுள்ளன. அவளது கைவண்ணங்கள் The Art Faculty at Enabling Village அல்லது Ng Teng Fong பொது மருத்துவ மனையில் மனமகிழ்ச்சித்தரும் பொருட்கள் விற்கும் Mustard Tree கடை ஆகியவற்றில் காணலாம் மற்றும் வாங்கலாம்.

STATE COURTS
SINGAPORE

HAGAR
The whole journey

COMMUNITY
JUSTICE CENTRE

NUS National University of Singapore
Centre for Pro Bono
& Clinical Legal Education
Faculty of Law

